Friedrich Filitz, 1804-1876

Captetown
77.75





பாமாலை 525 மூவரான ஏகரே

1 மூவரான ஏகரே
பூமி ஆழி ஆள்வோரே
கேளும் தயவாகவே
தாசர் கீர்த்தனம்.

2 ஜோதிகளின் ஜோதி நீர்
காலை தோறுந் தேவரீர்
ஒளி தோன்ற வீசுவீர்
அன்பின் கிரகணம்.

3 ஜோதிகளின் ஜோதி நீர்
மாலை தோறுந் தேவரீர்
மன்னிப்போடு ஈகுவீர்
சமாதானமும்.

4 மூவரான ஏகரே
அறிதற்கரியோரே
விண்ணில் உம் தாசருக்கே
தாரும் கிரீடமும்.